**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C.201 /2014**
**Deposition of witness for prosecution -PW-1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.வெள்ளைச்சாமி |
| Father Name | : | திரு.சிலையாண்டி தேவர் |
| Village | : | கீழத்தூவல் |
| Taluk | : | முதுகுளத்தூர் |
| Calling | : | காவல்துறை (ஓய்வு) |
| Religion | : | இந்து |
| Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 13 th day of March 2020.

முதல் விசாரணை :-

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். இதற்கு முன்பு கடந்த 23.10.2013ம் தேதியன்று தேவிப்பட்டிணம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது அன்றையதினம் இரவு 10.30 மணியளவில் தேவிப்பட்டிணம் உதவி ஆய்வாளர் திரு.முத்துசெல்வம் தலைமையில் நானும், காவலர் திரு.கோவிந்தவர்மன், தேவிப்பட்டிணம் கடலோர காவல்படை காவலர் திரு.சசிவர்ணம் ஆகியோர் தேவிப்பட்டிணம் - திருப்பாலைக்குடி E.C.R ரோட்டில் பத்தனேந்தல் முடக்கு ரோடு அருகில் வாகன தணிக்கை செய்தபோது TN 65 M 2094 என்ற எண்ணுள்ள டி.வி.எஸ் ஸ்டார்சிட்டி என்ற வாகனத்தை ஓட்டி வந்த பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த எம்.மணக்குடி கிராமத்தை சேர்ந்த முனியாண்டி மகன் அர்ச்சுணன் இருசக்கர வாகனத்தில் பின் இருக்கையில் அமர்ந்து வந்த மாரிமுத்து மகன் இராமு ஆகிய இருவரையும் உதவி ஆய்வாளர் விசாரித்தபோது அரசால் தடைசெய்யப்பட்ட கடல் குதிரை அழுகிய நிலையில் இருந்ததையும், சுமார் 1.700 கிராம் எடையுள்ள சங்கினுடைய நாகனம் ஆகியவற்றை விற்பனை செய்வதற்காக தேவிப்பட்டிணம் பெரியகடைத்தெருவை சேர்ந்த முகமது மைதீன் என்பவரிடமிருந்து வாங்கி வந்ததாக சொன்னார்கள். அதை உதவி ஆய்வாளர் கைப்பற்றி அந்த இடத்தில் தனிநபர் சாட்சி யாரும்

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

\முன்வராததால் நான், முதல்நிலை காவலர் திரு.கோவிந்தவர்மன், காவலர் திரு.சசிவர்ணம் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தோம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆகும். அதன் பின்பு எதிரிகளை கைது செய்து இராமநாதபுரம் வனச்சரக அலுவலரிடம் எதிரிகளையும், பிடிபொருட்களையும் ஒப்படைக்க உதவி ஆய்வாளாருக்கு உதவியாக இருந்தோம்.
எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

ஒத்தி வைக்கப்படுகிறது.

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C.201 /2014**
**Deposition of witness for prosecution -PW-2**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கோவிந்தவர்மன் |
| Father Name | : | திரு.சீனிவாசன் |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | தலைமை காவலர் |
| Religion | : | இந்து |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 13 th day of March 2020.

முதல் விசாரணை :-

நான் தற்போது இராமநாதபுரம் பி1 நகர் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 23.10.2013 ம் தேதியன்று தேவிப்பட்டிணம் காவல்நிலையத்தில் முதல்நிலைகாவலராக பணியில் இருந்தபோது அன்றையதினம் இரவு 10.30 மணியளவில் தேவிப்பட்டிணம் உதவி ஆய்வாளர் திரு.முத்துசெல்வம் தலைமையில் நானும், தலைமைக்காவலர் திரு.வெள்ளைச்சாமி, காவலர் திரு.கோவிந்தவர்மன், தேவிப்பட்டிணம் கடலோர காவல்படை காவலர் திரு.சசிவர்ணம் ஆகியோர் தேவிப்பட்டிணம் - திருப்பாலைக்குடி E.C.R ரோட்டில் பத்தனேந்தல் முடக்கு ரோடு அருகில் வாகன தணிக்கை செய்தபோது TN 65 M 2094 என்ற எண்ணுள்ள டி.வி.எஸ் ஸ்டார்சிட்டி என்ற வாகனத்தை ஓட்டி வந்த பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த எம்.மணக்குடி கிராமத்தை சேர்ந்த முனியாண்டி மகன் அர்ச்சுணன் இருசக்கர வாகனத்தில் பின் இருக்கையில் அமர்ந்து வந்த மாரிமுத்து மகன் இராமு ஆகிய இருவரையும் உதவி ஆய்வாளர் விசாரித்தபோது அரசால் தடைசெய்யப்பட்ட கடல் குதிரை அழுகிய நிலையில் இருந்ததையும், சுமார் 1.700 கிராம் எடையுள்ள சங்கினுடைய நாகனம் ஆகியவற்றை விற்பனை செய்வதற்காக தேவிப்பட்டிணம் பெரியகடைத்தெருவை சேர்ந்த முகமது மைதீன் என்பவரிடமிருந்து வாங்கி வந்ததாக சொன்னார்கள். அதை உதவி ஆய்வாளர் கைப்பற்றி அந்த இடத்தில் தனிநபர் சாட்சி யாரும்

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

முன்வராததால் நானும், தலைமைக்காவலர் திரு.வெள்ளைச்சாமி, காவலர் திரு.சசிவர்ணம் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தோம். அந்த அத்தாட்சியில் நாங்களும் கையொப்பம் செய்தோம். அதன் பின்பு எதிரிகளை கைது செய்து இராமநாதபுரம் வனச்சரக அலுவலரிடம் எதிரிகளையும், பிடிபொருட்களையும் ஒப்படைக்க உதவி ஆய்வாளாருக்கு உதவியாக இருந்தோம்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

ஒத்தி வைக்கப்படுகிறது.

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.